# முன்னுரை

## முன்னுரை

தமிழிலக்கியம் குறித்த ஆய்வுகள் பல்வேறு மையங்களில் பல்வேறு விதமாக நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் இவ்வாய்வுகளின் பெருவாரியான போக்கு இலக்கியத்தின் உள்ளடக்கத்தை ஆய்வதாகத்தான் அமைந்துள்ளது. எனவே ஆய்வாளர் அப்போக்கிலிருந்து வேறுபட்டு இலக்கியத்தை அழகியல் கோட்பாட்டின் வழியாக ஆய்வதற்கு இவ்வாய்வேட்டில் முயல்கிறார். இன்றைய அழகியல் கோட்பாடுகளில் பெரிதும் புதுமையாகவும், அதே நேரத்தில் தமிழ்ச்சூழலில் அதிகம் அறியப்படாததாகவும் விளங்கும் எடுத்துரைப்புக் கோட்பாட்டினை( Narratology ) முன் வைத்து, இந்நூற்றாண்டில் பெரிதும் தமிழ்பேசும் மக்களைத் தனது கவிதைகளின் மூலம் கவர்ந்து தனது ஆளுமையை நிலைநிறுத்தியுள்ள பாரதிதாசனின் கதைப் படைப்புக்களை விளக்கினால், இலக்கியத்தில் வினைபுரியும் அழகியல் கூறுகளை வெளிக்கொணர வாய்ப்பு ஏற்படலாம் என்று ஆய்வாளர் நம்பியதால் தனது ஆய்விற்கு இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

## ஆய்வின் நோக்கம்

தமிழ் இலக்கிய ஆய்வுச் சூழலுக்கு எடுத்துரைப்பியல் எனும் அழகியல் கோட்பாட்டினை அறிமுகப்படுத்தி, அதன் வழியாகப் பாரதிதாசனின் எடுத்துரைப்புத் திறத்தினை வெளிக்கொணர்வதே இவ்வாய்வேட்டின் நோக்கமாக அமைகிறது.

## ஆய்வு எல்லையும் ஆய்வு மூலங்களும்

பாரதிதாசனின் எடுத்துரைப்புத் திறத்தினை வெளிக்கொணரக் கீழ்க்கண்ட அவருடைய கதைப்பாடல்கள் ஆய்விற்கான மூலங்களாக விளங்குகின்றன.

1. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் (1930)
2. புரட்சிக் கவி (1937)
3. எதிர்பாராத முத்தம் (1941)
4. பாண்டியன் பரிசு (1943)
5. இருண்ட வீடு (1944)
6. காதலா? கடமையா? (1948)
7. கடற் மேற் குமிழிகள் (1948)
8. தமிழச்சியின் கத்தி (1949)
9. குறிஞ்சித் திட்டு (1959)
10. கண்ணகி புரட்சிக் காப்பியம் (1962)
11. மணிமேகலை வெண்பா (1962)

ஒரு படைப்பாளியின் எடுத்துரைப்புத் திறத்தினை மதிப்பிடுவதற்குக் கதைப்பாடல்களே பெரிதும் துணையாக அமையும் என்பதால் ஆய்வாளர் மேற்கண்ட கதைப் பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். ஆய்வின் எல்லையை முடிந்த அளவு மிகச் சுருக்கமாக அமைத்துக் கொண்டால்தான் ஆய்வினை நுட்பமாகவும் ஆழமாகவும் நிகழ்த்த முடியுமென ஆய்வாளர் கருதியதால் குடும்ப விளக்கு, அகத்தியன் விட்ட புதுக்கரடி முதலிய கதைப் பாடல்களை ஆய்விற்கு உட்படுத்தவில்லை.

கருதுகோள்

பாரதிதாசனின் கதைப்பாடல்கள் எடுத்துரைப்பியல் எனும் அழகியல் கோட்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் கண்டடைவதே இவ்வாய்வேட்டின் கருதுகோளாக அமைகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

"பாரதிதாசன் படைப்புக்கலை" என்ற தலைப்பில் ச. சு. இளங்கோ பாரதிதாசனின் கதைப்பாடல்களை ஆராய்ந்துள்ளார்; எனினும் எடுத்துரைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அவ்வாய்வு நிகழ்த்தப்பட வில்லை. எனவே இக்கோட்பாட்டின் அடிப்படையில் பாரதிதாசனின் கதைப்பாடல்களை ஆராய்கிற முதல் முயற்சியாக இவ்வாய்வேடு அமைகிறது.

## ஆய்வேட்டின் அணுகுமுறை

"பாரதிதாசன் கதைப்பாடல்களில் எடுத்துரைப்பு முறைகள்" என்ற இந்த ஆய்வேடு எடுத்துரைப்புக் கோட்பாடுகளைத் தனது ஆய்விற்கான அடிப்படையாக அமைத்துக் கொண்டு, பாரதிதாசன் கதைப்பாடல்களைத் தொகுத்தும், பகுத்தும், விளக்கியும் ஆராய்கின்றது.

## ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை, நீங்களாகக் கீழ்க் கண்ட நான்கு இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

1. தமிழ்க் கவிதையியல் மரபில் எடுத்துரைப்புச் சிந்தனை.
2. கதைமாந்தர்களும் பாரதிதாசன் எடுத்துரைப்புத் திறனும்.
3. பாரதிதாசன் கதைப்பாடல்களில் கதைப் பின்னல்.
4. பாரதிதாசன் கதைப்பாடல்களில் மொழித்திறம்.

1, 'தமிழ்க் கவிதையியல் மரபில் எடுத்துரைப்புச் சிந்தனை' என்ற முதல் இயல், தமிழ் இலக்கிய மரபில் எடுத்துரைப்பு குறித்த சிந்தனைகள் எவ்வாறு இருந்தன என்பதை அடையாளம் காண முயல்கிறது. இம்முயற்சிக்கு ஏற்பத் 'தொல்காப்பியத்தில் காணப்படும் எடுத்துரைப்புச் சிந்தனைகள்', 'இடைக்காலத்தில் காணப்படும் எடுத்துரைப்புச் சிந்தனைகள்' என்ற இருபெரும் தலைப்புக்களில் அமைந்து பல்வேறு உட் தலைப்புக்களையும் கொண்டு விளங்குகிறது.

2. 'கதைமாந்தர்களும் பாரதிதாசன் எடுத்துரைப்புத் திறனும்' என்ற இரண்டாவது இயல் எடுத்துரைப்பில் கதை மாந்தர் உருவாக்கம் எவ்வாறு நிகழ்கிறது, அதன் இடம் என்ன ஆகியன குறித்தும், பாரதிதாசனின் கதைமாந்தர்கள் எவ்வாறு அமைந்துள்ளனர் என்பது குறித்தும் ஆராய்வதற்கு முயல்கிறது. இம்முயற்சிக்கு ஏற்ப 'எடுத்துரைப்பில் கதைமாந்தர்கள் பெறும் இன்றியமையாமை', 'கதைமாந்தர் உருவாக்கம் குறித்த திறனாய்வுச் சிந்தனைகள்', 'கதைமாந்தர்களை வகைப்படுத்துதல்' என ஒரு பகுதியாகவும், பாரதிதாசனின் கதைமாந்தர்களை ஆராய்வதற்கு 'வகைமை அடிப்படையிலான கதைமாந்தர்கள்', பண்பு அடிப்படையிலான கதைமாந்தர்கள் என மற்றொரு பகுதியாகவும் இவ்வியல் அமைந்துள்ளது.

3. பாரதிதாசனின் கதைப்பாடல்களில் கதைப்பின்னல் என்ற மூன்றாவது இயல், எடுத்துரைப்பில் கதைப் பின்னல் இன்றியமையாத இடம்பெறுவதால் அது குறித்த ஆய்வாக அமைந்துள்ளது. கதைப்பின்னல் வரையறை, கதைப்பின்னலின் இன்றியமையாமை, கதைப் பின்னலின் வகைகள், பாரதிதாசனின் கதைப்பாடல்களில் கதைப் பின்னல்கள் ஆகிய உட்தலைப்புக்களைக் கொண்டு விளங்குகிறது.

4. பாரதிதாசனின் கதைப் பாடல்களில் மொழித்திறம் என்ற நான்காவது இயல், எடுத்துரைப்பில் ஒரு கவிஞரின் மொழி ஆளுமை பேரிடம் வகிப்பதால் பாரதிதாசனின் மொழித் திறத்தை ஆராய்வதற்கு முயல்கிறது. இம்முயற்சிக்கு ஏற்பப் பாரதிதாசனின் கதைப் பாடல்களில் உவமை, உருவகம், நடை, உணர்ச்சி, ஆகிய கூறுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் முடிவுரையாக, ஒவ்வொரு இயலிலும் ஆராய்ந்து கண்ட முடிவுகள் தொகுத்துத்தரப் பட்டுள்ளன. மேலும் வருங்கால ஆய்வாளர்களுக்கான வாய்ப்புக்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஆய்வேட்டில் அடிக்குறிப்புக்கள் ஒவ்வொரு இயலுக்குப் பின்னும் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாய்விற்குப் பயன்பட்ட நூல்கள் “துணைநூற் பட்டியல்” என்ற தலைப்பின் கீழ்த் தொகுக்கப்பட்டு ஆய்வேட்டின் இறுதியில் இணைக்கப் பட்டுள்ளன. இந்த ஆய்வேடு எடுத்துரைப்பியல் கோட்பாடுகளைப் பெரிதும் ஆங்கில நூல்வழியாகப் பின்பற்றி இருப்பதால் பல கலைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளது. கேரக்டர் (Charactor) என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கதைமாந்தர், கதைப் பாத்திரம் என்று வழக்கிலுள்ள இரண்டு சொற்றொடர்களையும் பயன்படுத்தியுள்ளது.